# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) 2009 / 2010 HELD IN DECEMBER - 2010

## ECS 3.11 – INTERNATIONAL ENVIORNMENT OF BUSINESS

எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. சர்வதேச வர்த்தகம் பற்றிய பின்வரும் விடையங்களை உள்ளடக்கியதாக விமர்சனக் கட்டுரை வரைக.

அ) வர்த்தகத்துக்கான பொருளாதார அடிப்படை

ஆ) சிறப்புத் தேர்ச்சி

இ) பரஸ்பர முழு நன்மை

ஈ) வர்த்தக நிலுவை

(20 புள்ளிகள்)

02. இலங்கை, இந்தியா என்பன தேயிலை, ஆடை ஆகிய இரண்டு பொருட்களை மாத்திரம் உற்பத்தி செய்கின்றன எனவும், அவை ஊழியத்தை மாத்திரம் பயன்படுத்துகின்றன எனவும் உற்பத்திப் பண்டங்களின் பெறுமானம் அவற்றை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஊழிய அலகின் தொகைக்குச் சமமானது எனவும், அவ்விரு நாடுகளிலும் நிறைதொழில் மட்டம் நிலவுகின்றது எனவும் கருதிக் கொள்க. உமக்குப் பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றன.

**இலங்கை :** 1 (kg) அலகு தேயிலையை உற்பத்தி செய்ய 10 அலகு ஊழியம் தேவைப்படுகின்றது.

1 (met) அலகு ஆடையை உற்பத்தி செய்வதற்கு 5 அலகு ஊழியம் தேவைப்படுகின்றது. மொத்த ஊழியப்படை : 1,000,000 அலகுகள்.

**இந்தியா :** 1 (kg) அலகு தேயிலையை உற்பத்தி செய்வதற்கு 15 அலகு ஊழியம் தேவைப்படுகின்றது.

1 (met) அலகு ஆடையை தயாரிப்பதற்கு 10 அலகு ஊழியம் தேவைப்படுகின்றது. மொத்த ஊழியப்படை : 750,000 அலகுகள்.

அ) இரு நாடுகளுக்குமிடையில் வர்த்தகம் நடைபெறாத நிலையில் அந்நாடுகள் ஒவ்வொன்றுக்குமான அட்டவணையை தயார்செய்து உற்பத்தி சாத்திய வரைகோட்டையும் வரைக.

(03 புள்ளிகள்)

ஆ) இப்போது போக்குவரத்துச் செலவு இல்லை எனக் கொள்க. இரு நாடுகளும் வர்த்தகத்தில் ஈடுபடலாமா? விளக்குக.

(03 புள்ளிகள்)

இ) தற்போது, இரு நாடுகளிடையேயும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் அமுலில் உள்ளதாயின், அவை எந்த நாணய மாற்றுவீதத்தில் தமது பண்டங்களைப் பரிமாறிக் கொள்ள முடியும்.? (தலா ஆடைக்கான தேயிலையின் அலகு)

(04 புள்ளிகள்)

ஈ) இக்கோட்பாட்டுக்குரிய எடுகோள்களைக் குறிப்பிட்டு அவற்றின் பொருத்தப்பாட்டை விளக்குக.

(10 புள்ளிகள்)

03. அ) காரணி விலை சமநிலைக் கோட்பாடு என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

(10 புள்ளிகள்)

ஆ) சர்வதேச வர்த்தகம் பற்றிய ஏனைய கோட்பாடுகளினை விடவும் இக்கோட்பாடு எவ்வளவுக்கு முன்னேற்றகரமானது? விளக்குக.

(10 புள்ளிகள்)

04. "ஹெக்சர் - ஒஹ்லின் கோட்பாடானது காரணி அளிப்புக்களின் அடிப்படையில் ஒப்பீட்டு நன்மையை விளக்குகின்றது." இக்கூற்றினை பழம் பொருளியலாளர்களின் ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டுடன் ஒப்பீட்டு, மெய்யுலக நிலமைகளுடன் இக்கோட்பாட்டின் பொருத்தப்பாட்டினையும் விளக்குக.

(20 புள்ளிகள்)

05. "சர்வதேச வர்த்தகத்தின் சுதந்திரமான தன்மையில் தாக்கத்தை ஏற்படுத்துவதில் வர்த்தகத்தின் மீதான தடைகள் அமைகின்றன."

அ) வர்த்தகத் தடைகளை எடுத்துக் கூறி அவற்றைப் பட்டியலிடுக.

(06 புள்ளிகள்)

ஆ) அவற்றின் விளைவுகளை பொருத்தமான வரைபடங்களைக் கொண்டு விளக்குக.

(14 புள்ளிகள்)

06. "இலங்கையின் 2011 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் முன்னொருபோதுமில்லாத வகையில் சுதந்திர வர்த்தகத்துக்கான புதிய பாதையை திறந்து விட்டுள்ளது." எனும் வாதத்தின் சாதக பாதக தன்மையை கருத்துரைக்குக.

(20 புள்ளிகள்)

07. சென்மதி நிலுவையில் ஏற்படக் கூடிய அடிப்படைச் சமநிலையின்மை (Fundamental Disequilibrium) என்பதனால் கருதப்படுவது யாது? அதனை சரிசெய்யக்கூடிய ஆலோசனைகளை இலங்கையுடன் தொடர்புபடுத்தி கருத்துரைக்குக.

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு (02) விளக்கக் குறிப்புகள் எழுதுக.

அ) வெளிநாட்டு நேரடி முதலீடு

ஆ) கொள்வனவுச் சக்தி சரிசம மதிப்புக் கோட்பாடு

இ) காரணிச் செறிவுத் திரும்பல்

ஈ) சப்ரா (SAPTA)

(தலா 10 புள்ளிகள்)

*****